IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF, THIRUMANGALAM

DEPOSITION OF WITNESS (PW1)

Solemnly affirmed and sworn by Tmt.Kaliammal, Assistant on 26.02.2024 in accordance with the provisions of Act XX141.

**அசல் வழக்கு எண்– 40/2021**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாந்தி | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா. 1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

எனது தாயாருக்கு அனுப்பப்பட்ட சர்வே எண். 906/25 ற்கான நோட்டீஸ்சை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**09.10.1998 ம் தேதியிட்ட நோட்டீஸ் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது தாயாரும் உடன் பிறந்தவர்களும் எனக்கு எழுதிகொடுத்த பாகபாத்திய விடுதலை ஆவணத்தின் சான்றிட்ட நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**18.11.2004 ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கு எனது பெயரில் செலுத்திவரும் மின் கட்டண ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**மின் கட்டண ரசீதுகள் (3 எண்ணம்) வா.சா.ஆ. 3 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கு எனது பெயரில் செலுத்திவரும் சொத்து வரி ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**01.09.2018 ம் தேதியிட்ட சொத்து வரி ரசீது வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கு எனது பெயரில் செலுத்தப்பட்ட தண்ணீர் வரி ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**தண்ணீர் வரி ரசீதுகள் (3 எண்ணம்) வா.சா.ஆ. 5 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**21.02.2021 ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்தின் மதிப்பை காட்டகூடிய வழிகாட்டி மதிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**11.02.2021 ம் தேதியிட்ட வழிகாட்டி மதிப்பு வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் பிரதிவாதிகளுக்கு எதிராக அனுப்பிய புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**29.01.2021 ம் தேதியிட்ட புகார் மனு நகல் மற்றும் அஞ்சலக ரசீதுகள் (2 எண்ணம்) வா.சா.ஆ. 8 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கான புல வரைபடத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சர்வே எண்.906 ற்கான புல வரைபடம் வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பிராதுபடி தீர்ப்பாகவேண்டி கேட்டுக்கொள்கிறேன்.
(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

/sd/Thiru.C.Dineshkumar,
Additional District Munsif (FAC),
Thirumangalam.